வலயக்கல்வி அலுவலகம், மன்னார்
Zonal Education Office, Mannar

முதலாம் தவணைப் பரீட்சை

தரம் : 11 | இஸ்லாம் | நேரம் : 3மணித்தியாலம்

சுட்டெண் :

பகுதி – I

மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. இஸ்லாமிய அகீதாவுக்கு அடிப்படையாக அமைவது
   1) அல்குர் ஆனும், சுன்னாவும்
   2) இஜ்மாவும் கியாஸும்
   3) அல்குர் ஆனும், இஜ்மாவும்
   4) கியாஸும், உர்பும்

2. அஹ்லுல் பைத் எனப்படுவோர்
   1) நபி (ஸல்) அவர்களின் தோழர்கள்
   2) நபி (ஸல்) அவர்களின் மனைவியர்
   3) நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினர்
   4) சுவனத்தைக் கொண்டு சுப செய்தி கூறப்பட்டோர்

3. சுன்னத்தான நோன்பு நோற்பதற்கு பொருத்தமான வார நாட்கள்
   1) வெள்ளி, சனி
   2) திங்கள், வியாழன்
   3) ஞாயிறு, திங்கள்
   4) வியாழன், வெள்ளி

4. ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காகச் செல்லும் ஒருவர் ஹஜ்ஜை மாத்திரம் நிறைவேற்றுவதற்காக நிய்யத் வைத்தார். இச்செயற்பாடு
   1) அத்தமத்து
   2) அல் இப்ராத்
   3) அல்கிரான்
   4) அல் இத்லாக்

5. முகஸ்துதியுடன் கூடிய அமல் எதற்கு ஒப்பானது.
   1) குப்ர் 2) றித்தத் 3) ஷிர்க் 4) நிபாக்

6. நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை முதன்முதலில் எழுதியவர்
   1) இப்னு ஹிஸாம்
   2) இப்னு இஸ்ஹாக்
   3) இப்னு ஹல்தூன்
   4) இப்னு கல்லிகான்

www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945

பிரிவு 1&2

76667-4945

தரம் 01
தொடக்கம்

ஆரம்பம்: தரம் 11 வரை



2025

Grade 1 - 11
தமிழ் மீடியம்

Grade 6 - 8
English Medium

COMMERCIAL BANK
Easy to Learn (Pvt) Ltd
Wellawatte
8008392295

BOC
BANKERS TO THE NATION
S.Kishokumar
Nelliyaddy Branch
86479603

PEOPLE'S BANK
S.Kishokumar
Jaffna University
162-2-001-7-0028670

eZ Cash
0766674945

7. இஸ்லாத்தின் இரண்டாவது புனிதத்துவம் பெற்ற மஸ்ஜிதாக அமைவது
   1) மஸ்ஜிதுல் ஹராம் 2) மஸ்ஜிதுன் நபவி
   3) மஸ்ஜிதுல் அக்ஸா 4) மஸ்ஜிதுல் குபா

8. க.்பாவை முதன் முதலில் கட்டிய நபி
   1) முஹம்மத் (ஸல்) 2) நூஹ் (அலை)
   3) ஆதம் (அலை) 4) இப்ராஹீம் (அலை)

9. ஸக்காத்தின் பர்ளுகள் இரண்டில் ஒன்று நிய்யத் வைத்தல் மற்றயது
   1) நிஸாபை அறிந்திருப்பது 2) தகுதியானவர்களுக்கு கொடுப்பது
   3) கணக்கு பார்த்து வழங்குவது 4) சமூகநலத்தேவைகளுக்கு கொடுப்பது.

10. ஸம்ஸம் நீரூற்றுக்கு காரணமாக இருந்த நபி
   1) இப்ராஹீம் (அலை) 2) இஸ்மாயீல் (அலை)
   3) இஸ்ஹாக் (அலை) 4) இஸ்ராபீல் (அலை)

11. இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் முஸ்லீம்களுக்கு ஆன்மீகப் பயிற்சியும் கல்வியும் வழங்கப்பட்ட இடம் எது?
   1) க.்துல்லாஹ் 2) தாருன் நத்வா
   3) ஸபா மலைக்குன்று 4) தாருல் அர்கம்

12. இஜ்திஹாதின் அடிப்படையில் அமைந்த மூலாதாரங்களுள் முதன்மையானது
   1) கியாஸ் 2) இஜ்மா 3) உர்ப் 4) மஸ்லஹா

13. தானாகவே இறந்த வெட்டுக்கிளி
   1) இலகுவான நஜீஸ் 2) கடுமையான நஜீஸ்
   3) சாதாரண நஜீஸ் 4) தூய்மையானது

14. நபி (ஸல்) அவர்களது காலத்தில் தான் ஒரு நபி என்று வாதிட்டவர்
   1) துலைஹா 2) ஸஜா 3) முஸைலமா 4) அஸ்வத் அன்ஸி

15. அல்குர் ஆனில் இடம் பெற்றுள்ள நீண்ட சூரா
   1) அல்க.்பு 2) ஆல இம்ரான் 3) அல் பகரா 4) அல்முல்க்

16. ‘‘ஹய்ய அலஸ் ஸலாஹ்’’ என்பதன் பொருள்
   1) தொழுகை ஆரம்பமாகிவிட்டது.
   2) தொழுகைக்கு விரைந்து வாருங்கள்
   3) வெற்றியின் பக்கம் விரைந்து வாருங்கள்
   4) தொழுகை தூக்கத்தை விடச் சிறந்தது

www.lkedu.lk

17. "தர்தீபுன் நுஸுல்" என்பது

1) அல்குர் ஆன் ஓதும் முறை
2) அல்குர் ஆன் எழுதப்படும் முறை
3) அல்குர் ஆன் இறங்கிய ஒழுங்குமுறை
4) அல்குர் ஆன் பாதுகாக்கப்பட்ட ஒழுங்குமுறை

18. முஹாஸபா என்பதன் மூலம் கருதப்படுவது

1) சுய விசாரணை
2) உளத்தூய்மை
3) இறை திருப்தி
4) பொறுமையைக் கடைப்பிடித்தல்

19. அல்லாஹ் பற்றிய நம்பிக்கையை உள்ளடக்கும் தொகுதி

1) அந்நுபுவ்வாத்
2) அல் இலாஹிய்யாத்
3) அர்ரூஹானிய்யாத்
4) அஸ்ஸம் இய்யாத்

20. பின்வருவனவற்றுள் துணை மூலாதாரங்களுள் ஒன்று

1) புர்கான்
2) சுன்னா
3) கியாஸ்
4) யாவும் பிழை

21. போர்களத்தில் பலவீனமடைந்த எதிரி எக் கலிபாவின் முகத்தில் காறி உமிழ்ந்தான்

1) உமர் (ரழி)
2) உஸ்மான் (ரழி)
3) அபூபக்கர் (ரழி)
4) அலி (ரழி)

22. அல்லாஹ் இரும்பினை மனிதத் தேவைகளுக்கு பயன்படுத்தும் தொழிநுட்ப அறிவை எந்த நபிக்கு வழங்கினான்.

1) தாவூத் (அலை)
2) இத்ரீஸ் (அலை)
3) ஸகரியய்யா (அலை)
4) நூஹ் (அலை)

23. பின்வருவனவற்றில் சேவைத் தொழில் அல்லாதது?

1) கற்பித்தல்
2) தாதி
3) காவல்பணி
4) விவசாயம்

24. உம்மஹதுல் மு.ஃமின்களில் வலை பின்னி சீவியம் நடத்திய பெண்மணி

1) கதீஜா (ரழி)
2) ஸைனப் பின்து ஜஹ்ஷ்
3) ஆயிஷா (ரழி)
4) ஸபிய்யா (ரழி)

25. அதிகமான மக்கள் அலட்சியமாக நடந்து கொள்ளும் இரண்டு அருட்கொடைகளில் ஒன்று ஆரோக்கியம் மற்றயது .....

1) ஓய்வு
2) நித்திரை
3) பொழுதுபோக்கு
4) விளையாட்டு

26. ஜாஹிலிய்யக் காலத்தில் இணை வைப்பில் ஈடுபடாதவர்களை எவ்வாறு அழைப்பர்

1) ஹதீப்கள்
2) ஹனீப்கள்
3) ஹாஜிகள்
4) யதீம்கள்

27. ஹபஷா நாட்டின் தற்போதய பெயர் யாது?

1) துருக்கி
2) பலஸ்தீன்
3) எதியோப்பியா
4) இஸ்ரேல்

www.ikedu.lk

28. "உண்டும் குடித்தும் வயிற்றை நிரப்புவது பற்றி உங்களை எச்சரிக்கின்றேன்" எனக் கூறியவர்

1) நபி (ஸல்) 2) உமர் (ரழி) 3) அலி (றழி) 4) அலி (றழி)

29. கீழே தரப்பட்ட ஓஇலு நிரல்களில் உள்ள விடயங்களை இணைத்தால் வரும் சரியான தொகுதி

X	Y
முஹம்மத்	யு. இறுதியானவன்
மாஹி	டீ. ஒன்று சேர்ப்பவன்
ஹாஷிர்	ஊ. புகழுக்குரியவன்
ஆகிப்	னு. இல்லாதொழிப்பவன்

1) ABDC 2) BADC 3) CDBA 4)CBAD

.30. க.்பாவில் சிலை வணக்கத்தை ஆரம்பித்தவர்

1) அம்ர் இப்னு லுஹை 2) அம்ர் இப்னு ஆஸ்

3) அபூலஹப் 4) அபூசுப்யான்

31. நபி (ஸல்) அவர்கள் குறைஷிகளினால் பகிஷ்கரிப்புக்கு உள்ளான இடம் எது?

1) அகபா பள்ளத்தாக்கு 2) ஹுதைபியா 3) தெளர் குகை 4) ஷி.்புஅபீதாலிப்

32. கழா என்ற சொல்லின் கருத்தை தருக.

1) படைத்தல் 2) திட்டமிடுதல் 3) தீர்ப்பளித்தல் 4) நிறைவேற்றுதல்

33. க.்பாவின் நடுவில் நிலை நிறுத்தப்பட்ட சிலை

1) லாத் 2) மனாத் 3) ஹுபல் 4) உஸ்ஸா

34. முர்தத்துகளுக்கு எதிராக போராடிய கலீபா

1) முஆவியா (ரழி) 2) உமர் (ரழி) 3) உஸ்மான் (ரழி) 4) அபூபக்கர் (ரழி)

35. இறுதி நபித்துவம் என்பதற்கு

1) காத்தமுன் நபிய்யீன் 2) கத்முன் நுபுவ்வத்

3) றஹ்மதுன் லில் ஆலமீன் 4) காப்பதுன் லின்னாஸ்

37. முஸ்லிம்களின் எதியோப்பிய ஹிஜ்றத் குழுவின் தலைவராக செயற்பட்டவர்?

1) ஜ.்பர் இப்னு அபீதாலிப்
2) உஸ்மான் இப்னு அப்பான்
3) காலித் இப்னு வலீத்
4) அமர் இப்னு ஆஸ்

www.ikedu.lk

38. நபி (ஸல்)அவர்களின் பணிகளிலொன்று

1) ஜிஹாதுக்கு அழைத்தல்
2) மனிதர்களைப் பரிசுத்தப்படுத்தல்
3) குடியை தடுத்தல்
4) கொலையைத் தடுத்தல்

39. நபி (ஸல்) அவர்களின் பின்னர் மஸ்ஜிதுல் அக்ஸாவில் தொழுத முதல் மனிதர் யார்?

1) உமர் (ரழி) 2) ஸலாஹுத்தீன் ஐயூபி
3) பிலால் (ரழி) 4) அபூபக்கர் (ரழி)

40. உஸூலுல் பிக்ஹ் என்ற நூலை தொகுத்தளித்த இமாம்

1) இமாம் மாலிக் 2) இமாம் ஷாபிஈ 3) இமாம் புஹாரி 4) இமாம் ஹன்பல்

பகுதி II

முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. சுருக்கமான விடை தருக.

1) அரபு மொழியில் நற்பண்புகளைக் குறிக்கும் பதங்கள் இரண்டு தருக.
2) ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிகள் இரண்டு தருக.
3) கியாஸின் அர்கான்கள் 4 தருக.
4) வரலாற்றில் தோன்றிய போலி நபிமார்கள் இருவரின் பெயரைத் தருக.
5) வசதியிருந்தும் ஹஜ் செய்யாதவருக்கு நபி (ஸல்) கூறிய தண்டனை யாது?
6) தவாப்களில் இரண்டினைத் தருக.
7) ஸகாத் பெறத் தகுதியானோரில் இருவரைக் குறிப்பிடுக.
8) நோன்பின் பர்ளுகளைக் குறிப்பிடுக.
9) நஜீஸ் எத்தனை வகைப்படும் அவை எவை?
10) பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற்ற ஆண்டுகளைக் குறிப்பிடுக.

A- பர்த் யுத்தம் B - யமாமா யுத்தம்

(10x2= 20 புள்ளிகள்)

www.lkedu.lk

2. 1) இஸ்லாத்தில் திருமணம் முடிக்க தடை செய்யப்பட்டவர்கள் இரண்டு பேரைத் தருக.
   2) இஸ்லாமிய ஷரீஆவின் பார்வையில் திருமணத்தின் நோக்கங்கள் மூன்று தருக.
   3) பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர் செய்யவேண்டிய கடமைகள் ஐந்து தருக.

(2+3+5=10 புள்ளிகள்)

3. 1) ஸீறா என்றால் என்ன?
   2) நபி (ஸல்) அவர்களின் ஸீறா பாதுகாக்கப்படுவதற்கான காரணங்கள் மூன்றை குறிப்பிடுக.
   3) இஸ்லாமிய பொருளாதார முறையின் சிறப்பம்சங்கள் 5 தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

4. 1) வியாபாரத்தின் அடிப்படைகளில் ஈஜாப், கபூல் என்றால் என்ன?
   2) அஜ்னபியான ஆண்களோடு பழகும் போது பேணவேண்டிய வரையறைகள் மூன்று தருக?
   3) இஸ்லாம் எமக்கு வழங்கியுள்ள மனித உரிமைகள் ஐந்தை எழுதுக.

(2+3+5=10 புள்ளிகள்)

5. 1) அகீதாவை மையமாகககொண்டு தோன்றிய நான்கு முக்கிய பிரிவுகள் யாது?
   2) ஜனாபத்தை ஏற்படுத்தும் விடயங்கள் மூன்று தருக?
   3) ஸகாத்தின் சமூகப்பயன்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

6. 1) தொழுகையின் பின்பு ஓதக்கூடிய சுன்னத்தான ஓதல்கள் இரண்டு தருக.
   2) சூறதுல் லுக்மானில் வந்துள்ள 3 நற்பண்புகளைக் குறிப்பிடுக.
   3) அஹ்லுஸ்ஸீன்னா வல்ஜமா ஆவின் கோட்பாடுகள் 5 தருக.

(2+3+5=10 புள்ளிகள்)

7. 1) இஜ்மா என்றால் என்ன?
   2) இஜ்மாவின் வகைகள் 3 தருக.
   3) வஹியின் முக்கியத்துவம் 5 தருக.

(2+3+5=10 புள்ளிகள்)

www.ikedu.lk